ஆற்றல் பொதுவாக நகரசபைகளுக்கு இல்லை. அதாவது கால்வாய்களைக் கட்ட ஆகின்ற செலவுக்கான தொகையை நாம் கொடுத்தால் அதைத் திருப்பிக் கொடுக்கின்ற ஆற்றல் நகராசபைகளுக்கு இல்லை. குடிநீர் திட்டத்திற்காக வழங்கப்படும் மொத்தத் தொகையையும் குடிநீர் வழங்கவே பயன் படுத்துவதில் நியாயமிருக்கிறது. குடிநீர் திட்டத்திற்காகச் செலவு செய்தால் அதிலிருந்து வருமானம் வர வாய்ப்பிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டத்திற்குச் செலவு செய்தால், அதனை வரிகளை ஏற்றித்தான் நாம் ஈடுகட்ட வாய்ப்பிருக்கிறதே தவிர, தனியாக வருமானம் பெற வாய்ப்பு சற்றுக் குறைவாக இருக்கிறது.

புதுக்கட்டளை கால்வாயின் குறுக்கே பாலம்

*255 வினா—திரு. கு. காமாட்சி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவெறும்பூர் தொகுதி, மணிகண்டம் ஒன்றியம், பாகனூர், ஊராட்சிக்கு அருகில் புதுக்கட்டளை உயர்மட்டக் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, பாலம் அமைப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி தொகையை, கிராமத்திலுள்ள மக்கள் கொடுக்க முன் வந்துள்ளார்கள். ஆகவே. இதனை மீண்டும் பரிசீலனை செய்து, கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாலம் கட்ட மட்டும் ரூ. 50,000 செலவாகும். அதற்கு அணுகு சாலைகள் அமைக்க ரூ. 50,000 செலவாகும். ஆக ரூ. 1 இலட்சம் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொகையை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும். ஊராட்சி ஒன்றியத்திடம் நிதியில்லை. ஆகவே, அரசு வேறு வேலைத் திட்டங்களில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்திருக்கிறார். நிதிப் பற்றுக்குறை காரணமாக இப்பொழுதில்லையென்று நான் சொன்னேன்.